**காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்**
**07.07.2022 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டத்தின்**
**தீர்மான நகல்**

**பொருள் எண் :-1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் மானிய கோரிக்கை எண்.34/16-ல் கண்டுள்ள அறிவிப்பின்படி காயல்பட்டினம் நகராட்சியில் கடந்த 40 வருடங்களாக சேகரிக்கப்பட்ட குப்பைகளை (Legacy Waste) நில அளவை எண்.43/1 பப்பரப்பள்ளி (வண்ணாந்துறை வட்டக்கிணறு) பகுதியில் கொட்டப்பட்டுள்ளதை அப்புறப்படுத்துவதற்கு பணியின் அவசியம் கருதி Bio Mining பணிக்கான திட்டமதிப்பீடு ரூ.180.00 இலட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.9512/2022/SBM-1, நாள்.20.06.2022ன்படி கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நகராட்சியின் பெயர் | பணியின் விவரம் | மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி | மதிப்பீட்டு ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | காயல்பட்டினம் | Remove the Legacy waste dumped (approximately 22437 cu.m) through Bio Mining Process | 40588 | 180.00 |

மேற்க்காணும் பணிகளை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.180.00 இலட்சத்திற்கு மத்திய அரசு மானியம் (GOI 50 சதவீதம்) மாநில அரசு மானியம் (GOTN 33 சதவீதம்) நகராட்சி பங்குதொகை (ULB Contribution 17 சதவீதம்)ஆகும். நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு;

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி பங்கு தொகை 17 சதவீதம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1036/2021/இ1

**தீர்மானம் எண்.113**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து 17 சதவீதம் நகராட்சி பங்குத் தொகை செலுத்த மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**ஒம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
காயல்பட்டினம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி

7/7/22

CS CamScanner